## 11. செய்ந்நன்றியறிதல்

101. *செய்யாமல் செய்த உதவிக்கு வையகமும்*
*வானகமும் ஆற்றல் அரிது*

**நம்மிடத்தில் எந்த உதவியும் பெறாமல் இருந்தும்**
**நமக்குக் கேட்காமலேயே தக்க சமயத்தில்**
**நயந்து உதவி செய்தால் அதற்கு**
**நன்கொடையாக விண்ணுலகமும் மண்ணுலகமும் கூட ஈடாகாது !**

102. *காலத்தி னாற்செய்த நன்றி சிறிதெனினும்*
*ஞாலத்தின் மாணப் பெரிது*

**உதவி மிகச் சிறியதாக இருந்தாலும்**
**உரிய காலத்தில் வழங்கப்பட்டால்**
**உலகத்தை விடச் சிறந்த மதிப்புடையதாகும் !**

103. *பயன்தூக்கார் செய்த உதவி நயன்தூக்கின்*
*நன்மை கடலின் பெரிது*

**என்ன பயன் கிடைக்கும் என்றே ஒருவர்**
**எண்ணிப் பார்க்காமல் செய்த உதவியை**
**எண்ணத்தில் கொண்டால் அதன் நன்மை**
**ஆழக் கடலையும் விடப் பெரிது !**

104. *தினைத்துணை நன்றி செயினும் பனைத்துணையாக்*
*கொள்வர் பயன்தெரி வார்*

**தினை அளவு நன்மை செய்திருந்தாலும்**
**திறம்பட அதன் பயனை அறிந்தவர்–**
**பல்வேறு வகையில் பயன்படும்**
**பனை அளவாய் அதனைக் கருதுவர் !**

105. *உதவி வரைத்தன் றுதவி உதவி*
*செயப்பட்டார் சால்பின் வரைத்து*

**உதவியை அளவிடும் வரையறை**
**உதவிய பொருளைப் பொறுத்தல்ல !**
**உள்ளத்தைப் பொறுத்ததே !**

*106.* *மறவற்க மாசற்றார் கேண்மை துறவற்க*
*துன்பத்துள் துப்பாயார் நட்பு*

**தூய மாசற்றவரின் உறவையும்**
**துன்பத்தில் என்றென்றும்**
**துணை நின்றவரின் நட்பையும்**
**துறக்கவும் கூடாது ! மறக்கவும் கூடாதது !**

*107.* *எழுமை எழுபிறப்பும் உள்ளுவர் தங்கண்*
*விழுமந் துடைத்தவர் நட்பு*

**எழுகின்ற பிறப்பெல்லாம்**
**எண்ணுவார் – தன் துன்பத்தை**
**எண்ணிப் போக்கிய தூய நட்பின்**
**எல்லையில்லா மகிமையை !**

*108.* *நன்றி மறப்பது நன்றன்று நன்றல்லது*
*அன்றே மறப்பது நன்று*

**உதவியை மறப்பது நல்லதல்ல ! ஆனால்**
**உதவிடாத் தீமையை நெஞ்சில் கொள்ளாமல்**
**உடனடியாக அன்றே மறப்பது நன்று !**

*109.* *கொன்றன்ன இன்னா செயினும் அவர்செய்த*
*ஒன்றுநன் றுள்ளக் கெடும்*

**கொல்வதைப் போன்ற தீமையான**
**கொடுமையை ஒருவர் செய்தாலும் – முன்பு அவர்**
**கொடுத்துச் சென்ற நன்மையை உள்ளத்தில்**
**கொண்டால் போதும் !**

*110.* *எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை*
*செய்ந்நன்றி கொன்ற மகற்கு*

**அறம் பல மறந்தவர்க்கும் கூட**
**அருமை வாழ்வு உண்டு ! – ஆனால்**
**அவரவர்க்கு 'செய்ய வேண்டிய நன்றியை'**
**அறவே மறந்தவர்க்கு வாழ்வே இல்லை !**